# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

## அசல் வழக்கு எண். 10/2025

இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் 23 நாள் வியாழன் கிழமை இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின்) திருமதி.A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : பாப்பாத்தி

கணவர் பெயர் : சந்திரன்

வயது :

தொழில் :

---

**முதல் விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 14.03.1956 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| 2. | வா.சா.ஆ.2 | EP No. 76/2018 உத்தரவு | கணினி நகல் |
| 3. | வா.சா.ஆ.3 | ரங்கனின் இறப்பு சான்றிதழ் | கணினி நகல் |
| 4. | வா.சா.ஆ.4 | ரங்கன் வாரிசு சான்றிதழ் | கணினி நகல் |
| 5. | வா.சா.ஆ.5 | 23.04.1982 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| 6. | வா.சா.ஆ.6 | வில்லங்கச்சான்றிதழ் | அசல் |
| 7. | வா.சா.ஆ.7 | வாதியின் ஆதார் அடையாள அட்டை | அசலோடு ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது |
| 8. | வா.சா.ஆ.8 | 19.11.2008 ம் தேதி பதிவு செய்யப்பட்ட ரங்கனின் இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |

( 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி வா.சா.ஆ.1 மற்றும் 8 ஆவணங்களை குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவித்தார். அவரது ஆட்சேபணை பதிவு செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது )

(குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.10.23 17:37:31 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.